
ஸ்ரீராம்

# நீதிக்கதைகள்


## புத்தகம் - 10



INDIAN PRICE : 6-00

**Jeya Agency Private Ltd.,**
Importers & Sole Agents, 91, 99, Upper Ground Floor,
People's Park, COLOMBO - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
305.004



## தேசிய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRP
MADURAI

ஸ்ரீராம்

# நீதிக்கதைகள்

10


1. இரண்டு சேவல்கள்
2. ஓநாயும் கொக்கும்
3. வால் அறுந்த நரி
4. வேதாளமும் வழிப்போக்கனும்
5. கழுதையும் உப்பு மூட்டையும்
6. தவளையும் சிங்கமும்
7. காட்டுப் பன்றியும் சிங்கமும்
8. சிங்கமும் சுண்டெலியும்



ஸ்ரீராம் இண்டஸ்ட்ரீஸ்
46, தெற்கு வாசல் சின்ன கடைத் தெரு,
மதுரை-625001.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு சேவல்கள்


இரண்டு சேவல்கள் ஒவ்வொன்றும் ஒன்று மற்றதை விட வலிமையானது என்று சபதம் செய்தன. இதற்காக இரண்டு சேவல்களும் பலமாகச் சண்டை போட்டுக் கொண்டன. தங்களுக்குள் யார் பலசாலி? என்பது தான் சண்டைக்குக் காரணம். இந்தச் சண்டையில் ஒரு சேவலுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அந்தச் சேவல் தோற்றுப் போயிற்று. காயமடைந்த சேவல் வைக்கோல் போரின் அடியில் கீழே வந்து விழுந்து விட்டது.

வெற்றி பெற்ற சேவல் வைக்கோல் போரின் உச்சியில் ஏறி நின்று தனது வெற்றியைக் காட்டுவதற்காக கொக்கரித்துக் கூவியது. அச்சமயம் வானில் பறந்து வந்த கழுகு ஒன்று வெற்றிச் சேவலைப் பிடித்துக் கொண்டு பறந்து போயிற்று. இதைப் பார்த்த தோற்றுப்போன சேவல், தான் அடிபட்டதையும் தோல்வியையும் மறந்தது. தனது அதிர்ஷ்டத்தால் தான் காப்பாற்றப் பட்டதாக எண்ணி மகிழ்ச்சியடைந்தது.

நீதி: கர்வப் பட்டால் அழிவு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓநாயும் கொக்கும்

ஒரு ஓநாய் ஆடு ஒன்றைக் கொன்று வேகமாகத் தின்றது. அப்போது ஒரு எலும்புத் துண்டு அதன் தொண்டையில் சிக்கிக் கொண்டது. ஓநாய்க்கு வலி பொறுக்க முடியாமல் ஊளை இட்டுக் கொண்டு இங்குமங்கும் ஓடியது. தனது தொண்டையில் சிக்கிய எலும்பை எடுத்து விடுபவர்க்குத் தகுந்த பரிசு அளிப்பதாகக் கதறியது.

பேராசை கொண்ட கொக்கு ஒன்று பரிசுக்கு ஆசைப்பட்டு எலும்பை எடுக்கச் சம்மதித்தது. தன் நீண்ட அலகை ஓநாயின் வாய்க்குள் விட்டுச் சிக்கியிருந்த எலும்புத் துண்டை எடுத்தது. பின்பு கொக்கு ஓநாயிடம் "பரிசைக் கொடு" என்று கேட்டது.


அதைக்கேட்டு ஓநாய் சிரித்தது. "பரிசா? உனக்கா? உன் அலகு என் வாய்க்குள் இருக்கும் போது அதைக் கடிக்கமால் விட்டதே பரிசு அல்லவா? வேறென்ன பெரிய பரிசு வேண்டும்? ஓடிப்போ; உயிர் தப்பிப்போ, இல்லையேல் உன்னைக் கொன்று தின்று விடுவேன்" என்றது ஓநாய்.

ஏமாந்த கொக்கு உயிருக்குப் பயந்து வேகமாகப் பறந்து சென்றது.

நீதி: உதவி செய்வது யாருக்கு? என்பதைத் தெரிந்து செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வால் அறுந்த நரி

காட்டில் ஓர் இடத்தில் மிருகங்களை பிடிக்கும் பொறியும், அதனுள் சேவலும் வைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்ட நரி பொறியில் பாய்ந்தது. நரியின் வால் பொறியில் சிக்கிக் கொண்டது. நரி தப்பிக்க முயன்ற போது வால் பொறியில் வெட்டுப்பட்டு அறுந்து விட்டது. நரி தப்பியது. ஆனால் "வால் இல்லாமல் இருந்தால் மற்ற நரிகள் கேலி செய்யுமே,இதற்கு என்ன செய்யலாம்" என்று யோசித்தது, எல்லா நரிகளையும் வாலை அறுக்கச் செய்வது தான் நல்ல வழி என்று தீர்மானித்தது.

உடனே நரிகளை எல்லாம் கூட்டம் கூட்டிப் பிரசங்கம் செய்தது. "அன்பர்களே! நண்பர்களே! நமக்கு வால்களினால் ஒரு உபயோகமும் இல்லை. இடையூறு தான் உண்டு. தொல்லை தரும் இந்த வாலை நான் அறுத்து எறிந்து விட்டேன்! இப்போது சௌகரியமாகவுமிருக்கிறது.சுதந்திரமாகவும் இருக்கிறேன். இந்த மகிழ்ச்சி வால் இருந்த போது இல்லை. ஆகவே நீங்களும் உங்கள் வால்களை அறுத்து எறியுங்கள்!" என்று பேசியது.


கூட்டத்திலிருந்த ஒரு அறிவுள்ள பெரிய நரி எழுந்து, வாலறுந்த நரியைப் பரிகாசமாகப் பார்த்துக் கொண்டு, "இப்பொழுது பேசிய நம் அருமை நண்பரைப்போல நானும் கோழி திருடப்போய் வாலை இழந்த பிறகு உங்களிடம் வந்து கூறுகிறேன்! இப்போது எனக்கு இருப்பது அழகாகவும் கம்பீரமாகவும் இருக்கிறது." என்று பேசியது. இதைக்கேட்ட நரிக்கூட்டம் வாலறுந்த நரியின் தந்திரமான வஞ்சகப் பேச்சை உணர்ந்து கொண்டு வாலிழந்த நரியை கேலி செய்தவாறு கலைந்து சென்றன.

வாலறுந்த நரி வெட்கப்பட்டு காட்டுக்குள் ஓடிவிட்டது.

நீதி: சுயநலமிகள் பேச்சை நம்பக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாளமும் வழிப்போக்கனும்.

வேதாளம் காட்டில் சுற்றி வரும் போது ஒரு வழிப்போக்கனைக் கண்டது. அவன் பசியினால் வாடியும் குளிரால் நடுங்கிக் கொண்டும் இருந்தான். வேதாளம் அவன் மீது இரக்கம் கொண்டு அவனை தனது குகைக்கு வருமாறு அழைத்தது. அவன் எழுந்து வேதாளத்தோடு செல்லும்போது தன் விரல்களை ஊதிக் கொண்டே போனான், ஏன் ஊதுகிறாய்? என்று வேதாளம் கேட்டது. "என்னுடைய விரல்கள் குளிரால் விறைத்துப் போயின. அவற்றில் சூடு ஏற்ற ஊதுகிறேன்" என்று பதில் சொன்னான் அந்த வழிப்போக்கன்.

குகைக்குப் போனதும் சூடாக ஒரு கோப்பையில் கஞ்சி வார்த்துக் கொடுத்தது வேதாளம். வழிப்போக்கன் அதை வாங்கியதும் வாயால் அதை வேகமாக ஊதினான். அதைப்பார்த்த வேதாளம் ஆச்சரியப்பட்டது. "என்ன மறுபடியும் ஊதுகிறாய்? சூடுபோதாதா?" என்று வேதாளம் கேட்டது. "சூடு அதிகமாக இருக்கிறது அதனால் சூட்டை குறைப்பதற்காக ஊதுகிறேன்" என்றான்.

"அப்போது குளிரைப் போக்க உஷ்ணக்காற்றை ஊதினாய், இப்போது உஷ்ணத்தைப் போக்க குளிர்ந்த காற்றுஊதுகிறாய் ஒரே வாயால் உஷ்ணக் காற்றையும் குளிர் காற்றையும் நீ ஊதுவாயானால் இப்படிப்பட்ட ஏமாற்று வேலைகளை நான் நம்பவே முடியாது, ஓடு ஓடு" என்று கூறி அடித்துத் துரத்தியது வேதாளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கழுதையும் உப்புமூட்டையும்

ஒரு வியாபாரி ஒரு மூட்டை உப்பு வாங்கினான். அதைத் தன் கழுதையின் மீது ஏற்றிக் கொண்டு வந்தான். வழியில் ஒரு நீரோடையைக் கடக்கவேண்டும். நீரோடையில் வரும்போது கால்தவறிக் கழுதை தண்ணீரில் விழுந்தது. அதனால் மூட்டையிலிருந்த உப்பும் கரைந்து போயிற்று. கழுதை மீண்டும் தண்ணீரிலிருந்து எழுந்த போது மூட்டையின் பாரம் மிகவும் குறைந்து விட்டது. அதைக் கண்டு கழுதை சந்தோஷமடைந்தது. மறுநாள் வியாபாரி பஞ்சு வாங்கினான். பஞ்சு மூட்டையை அந்தக் கழுதை மீது ஏற்றி வந்தபோது பழைய நீரோடையை கடக்க நேர்ந்தது. ஓடையைப் பார்த்ததும் கழுதைக்குப் பழைய ஞாபகம் வந்தது. தண்ணீரில் நனைந்தால் பாரம் குறையும் என்று நினைத்தது. அதனால் தவறி விழுவது போலப் பாவனை செய்து தண்ணீருக்குள் விழுந்தது. பஞ்சு தண்ணீரில் நனைந்ததும் பாரம் அதிகமாயிற்று. கழுதை தண்ணீரை விட்டு எழுந்ததும் பாரம் சுமக்க முடியாத அளவுக்கு உயர்ந்ததை உணர்ந்தது. என்ன செய்வது? ஏமாற்றத்தோடு சுமந்து வந்தது.

நீதி: ஒரு சமயம் பலித்தது. மற்றொரு சமயம் பலிக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தவளையும் சிங்கமும்

ஒரு குளக்கரையில் மரத்தடியில் ஒரு சிங்கம் படுத்திருந்தது. நல்ல தூக்கத்தில் திடீரென்று ஒரு சப்தம் கேட்டு பதறி விழித்துக் கொண்டது. அது என்ன சப்தம் என்பது தெரியாமல் சிங்கம் பதறியது. அது நாலா பக்கமும் பார்த்தது. ஒன்றும் காணவில்லை. கண்ணுக்கு எதுவும் புலப்படாமல் சப்தம் மட்டும் வருவதைக் கண்டு சிங்கம் மிகவும் பதறியது. அதிக கோபத்தோடு எழுந்தது. சிங்கம் குளத்தைப் பார்த்தது. ஒரு தவளை தண்ணீரிலிருந்து கரைக்கு வருவதைப் பார்த்தது. திடுக்கிட வைத்த சப்தத்திற்கு காரணம் இதுதான். தவளையின் சப்தம் தான் என்று அறிந்தது. கோபத்தோடு கர்ஜித்தது. தவளை நடுங்கிவிட்டது. சிங்கம் குளத்தில் குதித்துத் தவளையைப் பிடித்துக் கொன்றது.

நீதி : தவளைதன் வாயால் கெடும் என்பது பழமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காட்டுப்பன்றியும் சிங்கமும்

ஒரு சுனையில் தண்ணீர் குடிப்பதற்கு ஒரு சிங்கமும் பன்றியும் வந்தன. யார் முதலில் குடிப்பது என்பதைப் பற்றி இரண்டிற்கும் விவாதம் ஏற்பட்டது. விவாதம் முற்றி சண்டையில் முடிந்தது. இரண்டும் பலமாக சண்டை போட்டன. சண்டையில் இரண்டும் பலத்த காயம் அடைந்தன. அதனால் களைத்துப் போய்ப் படுத்துவிட்டன. இந்தச் சண்டையில் எது செத்தாலும் அதைச் சாப்பிடுவதற்காக இரண்டு பெரிய கழுகுகள் உட்கார்ந்திருந்தன. கழுகுகளை சிங்கமும் பன்றியும் பார்த்துவிட்டன. அச்சமயமே இரண்டுக்கும் அறிவு உதயமாயிற்று. உடனே இரண்டும் "நாம் இந்தக் கழுகுகளுக்கு இரையாவதை விட நாமிருவரும் நண்பர்களாக இருப்பதே நல்லது" என்று கூறி நண்பர்களாயின. அமைதியாகத் தண்ணீர் குடித்துச் சென்றன.

நீதி : போட்டிச் சண்டை எப்பொழுதுமே ஆபத்தானது.

10 -15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கமும் சுண்டெலியும்

சிங்கம் ஒன்று அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. அப்போது ஒரு சுண்டெலி பக்கத்தில் வந்து ஓடி விளையாடியது. விளையாட்டின் ஆர்வத்தில் சிங்கத்தின் மீது ஏறி குதித்தது. அதனால் சிங்கத்தின் தூக்கம் கலைந்தது. சிங்கம் விழித்துக் கொண்டது. கோபங்கொண்ட சிங்கம் சுண்டெலி மீது தன் பாதத்தை வைத்து நசுக்கப் போயிற்று. அதைக் கண்ட சுண்டெலி அலறியது. "மகாராஜாவே! எனக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள்! தங்களுக்கு உதவி செய்யக்கூடிய நாள் ஒன்று வரும்" என்று விண்ணப்பித்தது. "என்ன! இந்தச் சுண்டெலி எனக்கு உதவி செய்வதா?" என்று கூறி சிரித்து விட்டு அதை விடுவித்தது. ஒரு நாள் அதே சிங்கம் வேடர்கள் வலையில் சிக்கிக் கொண்டது. தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் காடெல்லாம் அதிரும் படி கர்ஜித்தது. அதைக்கேட்ட பழைய சுண்டெலி ஓடி வந்து தன் கூரிய பற்களால் வலையைக் கடித்து வெட்டி சிங்கத்தை விடுவித்தது. சிங்கம் சுண்டெலியைப் பாராட்டியது.

நீதி : சிற்றுளியால் மலையும் தகரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராம்

# நீதிக்கதைகள்

## புத்தகம் - 10







வெளியிடுவோர் :

ஸ்ரீராம் இண்டஸ்ட்ரீஸ்,

46, தெற்கு வாசல் சின்ன கடைத் தெரு,

மதுரை-625001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org